நெல்லை மாவட்டம் ஐம்பு நதியில் அணைக்கட்டு.

458—(வினா எண் 12070)—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், ஐம்பு நதியில் அணைகட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில், தென்காசி தொகுதியிலுள்ள மிகவும் வறண்ட பகுதியில் இந்த ஐம்பு நதி அணைக்கட்டு திட்டம் இடம்பெற்றிருக்கிறது. இந்த அணை கட்டப்பட்டால் மழைக் காலத்தில் வீணாகின்ற தண்ணீர் எல்லாம் தேக்கப்பட்டு, அந்த நீரைப் பயன்படுத்தி தரிசாக இருக்கின்ற பூமி எல்லாம் வளமாக ஆக்கப்படுகின்ற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, எப்போது இத்திட்டம் நடைமுறைக்கு வரும் என்று அந்தத் தொகுதி மக்கள் சார்பாக நான் அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தின் மீது இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்தையும் மற்றும் நில ஆணையாளருடைய கருத்தையும் கேட்கும் அளவுக்கு முயற்சிகள் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் ஐம்பு நதியில் அணை கட்டும் திட்டத்தைப் பொறுத்தவரையில் தீவிரமாக, மிக வேகமாக அதனை நிறைவேற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அங்கே மிகவும் காய்ந்திருக்கும் கடையம் ஊராட்சி ஒன்றியப் பகுதியையும் இத்திட்டத்துடன் இணைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1987 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு இங்கே குறிப்பிலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் அந்தப் பகுதி இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்து சொல்லப்படும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமாசம் அவர்கள் சொன்ன கருத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன். உண்மையிலேயே ஐம்பு நதித் திட்டம் நிறைவேற்றப்பட்டால் அங்கேயுள்ள பாலைவனப் பகுதிகள் எல்லாம் சோலையாக மாற்றப்படும் மகத்தான வாய்ப்பு ஏற்படும். இத்திட்டத்தை நிறைவேற்ற நாம் வேறு மாநிலங்களை நம்பியிருக்க வேண்டிய அவசியமும் இல்லை. இது நம்முடைய மாநிலத்தில் ஓடுகிற நதி தான். ஆகவே, இப்போது இருக்கிற செயற்குறிப்பின் அடிப்படையில் இதற்கு எந்த அளவுக்கு அரசு செலவு செய்ய இருக்கிறது? அதன்மூலம் புதிதாக எத்தனை ஏக்கர் ஆயக்கட்டு பயனடையும்? அதுபோல் எந்த அளவு மக்களுக்குக் குடிநீர் ஆதாரம் என்கிற வகையில் பலன் கிடைக்கும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டதைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய 19 கோடி ரூபாய் அளவில் இன்றைக்கு இதற்கான திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம். அந்த அணையின் கொள்ளளவு 207 மில்லியன் கன அடி. இன்றைக்கு இதன் மூலம் ஏற்கெனவே உள்ள 1,422 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப் பாசன வசதி உறுதிபடுவதோடு, 438 ஏக்கர் நிலங்களுக்கு பாசன பற்றாக்குறையை போக்கவும் முயற்சிக்கப்படும். மேலும் 2,255 ஏக்கர் புதிய நிலங்களுக்கு இதன் மூலமாக பாசன வசதி அளிக்கப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS